

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

தொகுப்பு

**அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு**


هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

1

أَسْتَغْفِرُ اللَّهَ أَسْتَغْفِرُ اللَّهَ أَسْتَغْفِرُ اللَّهَ

اللَّهُمَّ أَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ تَبَارَكْتَ

يَا ذَا الْجَلَالِ وَالْإِكْرَامِ

**அஸ்தக்(ġ)பி(ف)ருல்லாஹ் அஸ்தக்(ġ)பி(ف)ருல்லாஹ்**
**அஸ்தக்(ġ)பி(ف)ருல்லாஹ்**
**அல்லாஹும்ம அன்தஸ் ஸலாமு வமின்கஸ் ஸலாமு தபாரக்த யா தல் ஜலாலி வல் இக்ராம்.**

அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடுகிறேன்! அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடுகிறேன்! அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடுகிறேன்! யா அல்லாஹ்! நீ ஈடேற்றமளிப்பவன். உன்னிடமிருந்து ஈடேற்றம் உண்டாகிறது. கண்ணியம் மாண்பும் உடையவனே! நீயே அருட்பேறுடையவன்.

**அறிவிப்பாளர்: ஸவ்பான்(ரலி) அவர்கள், முஸ்லிம் 1037**

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

2

لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ
وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ اللَّهُمَّ لَا مَانِعَ لِمَا أَعْطَيْتَ
وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்.
அல்லாஹும்ம லா மானிஅ லிமா அஃதை(ط)த(ت),
வலா முஃதி(ط)ய லிமா மனஃத(ت), வலா
யன்ப(ف)உ தல்ஜத்தி மின்கல் ஜத்

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையானவன் யாருமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது. எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன். இறைவா, நீ கொடுத்ததைத் தடுப்பவர் யாருமிலர். நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமிலர். எந்தச் செல்வரின் செல்வமும் அவருக்கு உன்னிடம் பயன் அளிக்காது.

அறிவிப்பாளர்: முகீரா இப்னு ஷுஅபா(ரலி) அவர்கள், புகாரி 844

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

3

لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ
عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللَّهِ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَلَا
نَعْبُدُ إِلَّا إِيَّاهُ لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ لَا إِلَهَ
إِلَّا اللَّهُ مُخْلِصِينَ لَهُ الدِّينَ وَلَوْ كَرِهَ الْكَافِرُونَ

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர். லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ். லாயிலாஹ இல்லல்லாஹு வலா நஃபுது இல்லா இய்யாஹ். லஹுன்னிஃமது வலஹுல் ப(ف)ழ்லு வலஹுஸ்(ث)ஸனாஉல் ஹஸன். லாயிலாஹ இல்லல்லாஹு முக்(خ)லிஸீன லஹுத்தீன். வலவ் கரிஹல் காபி(ف)ரூன்

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையானவன் எவனுமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது. எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன். அல்லாஹ்வின் உதவியின்றி பாவங்களிலிருந்து விலகிச் செல்லவோ, நல்லறங்கள் புரிய வலிமை பெறவோ (எவராலும்) இயலாது. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவனைத் தவிர வேறெவரையும் நாங்கள் வழிபடமாட்டோம். அருட்கொடைகள் அவனுக்கே உரியன. மாட்சிமை அவனுக்கே உரியது. அழகிய கீர்த்தியும் அவனுக்கே உரியது. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. வழிபாட்டை முற்றிலும் அவனுக்கே உரித்தாக்குகிறோம் (அவனது திருப்திக்காகவே அனைத்து அறங்களையும் செய்கிறோம்); இறைமறுப்பாளர்கள் வெறுத்தாலும் சரியே)

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1041

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

4

رَبِّ قِنِى عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ

ரப்பி கினீ அதாபக யவ்ம தப்அஸு(ث்) இபாதக

இறைவா ! உனது அடியார்களை உயிர் கொடுத்து எழுப்பும் நாளில் உனது தண்டனையிலிருந்து என்னைக் காப்பாயாக !

அறிவிப்பாளர்: பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1280

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

5-A

سُبْحَانَ اللهِ (٣٣)

الْحَمْدُ لِلّٰهِ (٣٣)

اللهُ أَكْبَرُ (٣٣)

لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ , لَهُ الْمُلْكُ ,

وَلَهُ الْحَمْدُ , وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ (١)

சுப்ஹானல்லாஹ் ( 33 முறை )

அல்ஹம்துலில்லாஹ் ( 33 முறை )

அல்லாஹு அக்பர் ( 33 முறை )

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு, லா ஷரீக்க லஹு, லஹுல் முல்கு, வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷைய்யின் கதீர் (1 முறை)

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1048

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

**5-B**

அல்லாஹ் தூயவன்.
அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்
அல்லாஹ் மிகப்பெரியவன்
அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை துணை கிடையாது. அவனுக்கே ஆட்சியதிகாரம் உரியது. அவனுக்கே புகழ் அனைத்தும் உரியன. அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன்

## சிறப்பு

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.
யார் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் முப்பத்து மூன்று முறை சுப்ஹானல்லாஹ் என்றும், முப்பத்து மூன்று முறை அல்ஹம்து லில்லாஹ் என்றும், முப்பத்து மூன்று முறை அல்லாஹு அக்பர் என்றும் ஆக மொத்தம் தொன்னூற்று ஒன்பது முறை கூறி, இறுதியில் நூறாவது முறையாக ‘லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக்க லஹு, லஹுல் முல்க்கு, வ லஹுல் ஹம்து. வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்‘ என்று நிறைவு செய்கிறாரோ அவருடைய (சிறு) பாவங்கள் யாவும் மன்னிக்கப்படுகின்றன. அவை கடலின் நுரையளவு இருந்தாலும் சரியே!

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1048**

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

6

سُبْحَانَ اللهِ، (٣٣)

الْحَمْدُ لِلهِ، (٣٣)

اللهُ أَكْبَرُ، (٣٤)

சுப்ஹானல்லாஹ் ( 33 முறை )

அல்ஹம்துலில்லாஹ் ( 33 முறை )

அல்லாஹு  அக்பர் ( 34 முறை )

அல்லாஹ் தூயவன்.

அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்

அல்லாஹ் மிகப்பெரியவன்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

'தொழுகைக்குப் பின் ஓதப்படும் சில துதிச்சொற்கள் உள்ளன. அவற்றைக் கடமையான ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் ஓதி வருபவர் நஷ்டமடையமாட்டார். (அவை) முப்பத்து மூன்று முறை சுப்ஹானல்லாஹ் என்றும்,  முப்பத்து மூன்று முறை அல்ஹம்து லில்லாஹ் என்றும் முப்பத்து நான்கு முறை அல்லாஹு அக்பர் என்றும் கூறுவதாகும்'.

அறிவிப்பாளர்:  கஅப் பின் உஜ்ரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 1046

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

7

سُبْحَانَ اللهِ (٣٣)

الْحَمْدُ لِلّٰهِ (٣٣)

اللهُ أَكْبَرُ (٣٣)

சுப்ஹானல்லாஹ் ( 33 முறை )

அல்ஹம்துலில்லாஹ் ( 33 முறை )

அல்லாஹு அக்பர் ( 33 முறை )

**அல்லாஹ் தூயவன்.**

**அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்**

**அல்லாஹ் மிகப்பெரியவன்**

## சிறப்பு

'..... நபி(ஸல்) அவர்கள் 'நான் உங்களுக்கு ஒரு காரியத்தைக் கற்றுத் தருகிறேன். அதை நீங்கள் செய்து வந்தால் உங்களை முந்திவிட்டவர்களை நீங்களும் பிடித்து விடுவீர்கள். உங்களுக்குப் பிந்தி வருபவர்கள் உங்களைப் பிடிக்க இயலாது. நீங்கள் எந்த மக்களுடன் வாழ்கிறீர்களோ அவர்களும் அந்தக் காரியத்தைச் செய்தால் தவிர அவர்களில் நீங்கள் மிகச் சிறந்தவராவீர்கள். (அந்த காரியமாவது) ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் 33 முறை இறைவனைத் துதியுங்கள், 33 முறை இறைவனைப் புகழுங்கள், 33 முறை இறைவனைப் பெருமைப் படுத்துங்கள்' என்று கூறினார்கள்.......'

**அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரலி) அவர்கள், புகாரி 843**

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

8

سُبْحَانَ اللّٰهِ (١٠)

اَلْحَمْدُ لِلّٰهِ (١٠)

اللّٰهُ أَكْبَرُ (١٠)

சுப்ஹானல்லாஹ் (10 முறை)

அல்ஹம்துலில்லாஹ் (10 முறை)

அல்லாஹு அக்பர் (10 முறை)

**அல்லாஹ் தூயவன்.**

**அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்**

**அல்லாஹ் மிகப்பெரியவன்**

## சிறப்பு

'..... நபி(ஸல்) அவர்கள், 'நான் உங்களுக்கு (அமல்) ஒன்றைத் தெரிவிக்கட்டுமா? (அதை நீங்கள் செயல்படுத்திவந்தால் இந்தச் சமுதாயத்தில்) உங்களை பின்னால் வருபவர்களையும் நீங்கள் எட்டிவிடுவீர்கள். இதைப் போன்று செய்தால் தவிர, வேறு எவரும் நீங்கள் செய்ததற்கு நிகராகச் செய்திட முடியாது. (அது யாதெனில்) நீங்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் பத்துமுறை 'சுப்ஹானல்லாஹ்' (அல்லாஹ் தூயவன்) என்றும், பத்து முறை 'அல்ஹம்து லில்லாஹ்' எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்றும், பத்து முறை 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ் மிகவும் பெரியவன்) என்றும் கூறுங்கள்' என்றார்கள்........'

**அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரலி) அவர்கள், புகாரி 6329**

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

9

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ

وَلَا إِلَهَ إِلَّا اللّٰهُ وَاللّٰهُ أَكْبَرُ (٢٥)

சுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்.

(25 முறை)

அல்லாஹ் தூயவன், அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, அல்லாஹ் மிகவும் பெரியவன்.

அறிவிப்பாளர்: ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள், நஸாயீ 1350

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

10

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْجُبْنِ وَأَعُوذُ بِكَ أَنْ أُرَدَّ إِلَى أَرْذَلِ الْعُمُرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الدُّنْيَا وَأَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஜுப்னி, வஅஊது பிக அன் உரத்த இலா அர்தலில் உமுரி, வ அஊது பிக மின் ஃபித்னத்தித் துன்யா, வஅஊது பிக மின் அதாபில் கப்ரி

'இறைவா! நான் கோழைத்தனத்திலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்; தள்ளாத வயது வரை நான் வாழ்வதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்; உலகின் சோதனைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்; புதைகுழியின் வேதனையிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்'

அறிவிப்பாளர்: ஸஅத் இப்னு அபீவக்காஸ்(ரலி) அவர்கள், புகாரி 2822

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

11

اللَّهُمَّ أَعِنِّى عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ

அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக , வஹுஸ்னி இபாததிக

யா அல்லாஹ்! நான் உன்னை நினைவு கூறுவதற்கும், உனக்கு நன்றி செலுத்துவதற்கும், உன்னை அழகிய முறையில் வணங்குவதற்கும் எனக்கு அருள் புரிவாயாக !

அறிவிப்பாளர்: ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள், நஸாயீ 1350

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

12-A

ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ٱلْحَىُّ ٱلْقَيُّومُ ۚ لَا تَأْخُذُهُۥ سِنَةٌ وَلَا نَوْمٌ ۚ لَّهُۥ مَا فِى ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِى ٱلْأَرْضِ ۗ مَن ذَا ٱلَّذِى يَشْفَعُ عِندَهُۥٓ إِلَّا بِإِذْنِهِۦ ۚ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ ۖ وَلَا يُحِيطُونَ بِشَىْءٍ مِّنْ عِلْمِهِۦٓ إِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضَ ۖ وَلَا يَـُٔودُهُۥ حِفْظُهُمَا ۚ وَهُوَ ٱلْعَلِىُّ ٱلْعَظِيمُ

அல்லாஹு லாஇலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம் லா தஃஹு(خ)துஹு ஸினத்துவ்வலா நவ்ம் லஹு மாபி(ف)ஸ் ஸமாவாதி வமாபி(ف)ல் அர்லி(ض) மன்தல்லதி யஷ்ப(ف)உ இன்தஹு இல்லா பி இத்னிஹி யஃலமு மாபயின அய்தீஹிம் வமா க(خ)ல்ப(ف)ஹும் வலா யுஹீதூன பிஷய்இம்மின் இல்மிஹி இல்லா பிமா ஷாஅ வஸிஅ குர்ஸிய்யுஹுஸ் ஸமாவாதி வல்அர்ல(ض) வலா யஊதுஹு ஹிப்(ف)லு(ظ)ஹுமா வஹுவல் அலிய்யுல் அழீ(ظ)ம்.

திருக்குர்ஆன் 2:255, நஸாயீ 9848

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

12-B

அல்லாஹ் – அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) இறைவன் வேறு இல்லை, அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன், என்றென்றும் நிலைத்திருப்பவன், அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்காது, வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன, அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னர் உள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னர் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது; அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது, அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை. அவன் மிக உயர்ந்தவன், மகிமை மிக்கவன்.

**சிறப்பு**

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: ‘கடமையான ஒவ்வொரு தொழுகைக்கும் பிறகு யார் ஆயத்துல் குர்ஸியை ஓதுகின்றாரோ அவர் சொர்க்கம் செல்வதற்கு மரணத்தைத் தவிர வேறொன்றும் தடையாக இருப்பதில்லை”

**திருக்குர்ஆன் 2:255, நஸாயீ 9848**

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

13-A

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ ﴿١﴾

اللَّهُ الصَّمَدُ ﴿٢﴾ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ﴿٣﴾

وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ ﴿٤﴾

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ ﴿١﴾

مِن شَرِّ مَا خَلَقَ ﴿٢﴾ وَمِن شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ﴿٣﴾

وَمِن شَرِّ النَّفَّاثَاتِ فِي الْعُقَدِ ﴿٤﴾

وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ﴿٥﴾

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ ﴿١﴾ مَلِكِ النَّاسِ ﴿٢﴾ إِلَٰهِ النَّاسِ

﴿٣﴾ مِن شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ ﴿٤﴾ الَّذِي يُوَسْوِسُ فِي

صُدُورِ النَّاسِ ﴿٥﴾ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ﴿٦﴾

திருக்குர்ஆன் 112, 113,114, அறிவிப்பாளர்: உக்பதுப்னு ஆமிர் (ரழி) அவர்கள், அபூதாவூத்: 1523

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

13-B

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

குல்ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸமத் லம் யலித். வலம் யூலத். வலம் யகுல்லஹு குபு(ஃ)வன் அஹத்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

குல் அவூது பி ரப்பில் ப(ஃ)லக். மின் ஷர்ரி மா ஃகலக். வமின் ஷர்ரி கா(ழ்)ஸிகின் இதா வகப். வமின் ஷர்ரின் நப்(ஃ)பாஸா(த்)தி பி(ஃ)ல் உகத். வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

குல்அவூது பிரப்பின் னாஸ். மலி(க்)கின் னாஸ். இலாஹின்னாஸ். மின் ஷர்ரில் வஸ்வாஸில் கன்னாஸ். அல்லதீ யுவஸ்விஸு ஃபீ ஸுதூரின்னாஸ். மினல் ஜின்னத்தி வன்னாஸ்.

திருக்குர்ஆன் 112, 113,114, அறிவிப்பாளர்: உக்பதுப்னு ஆமிர் (ரழி) அவர்கள், அபூதாவூத்: 1523

# தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் ஓத வேண்டிய துஆக்கள்

13-C

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை. (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

(நபியே!) நீர் சொல்வீராக: அதிகாலையின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும், இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும், இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்,பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போது உண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்).

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். (அவனே) மனிதர்களின் அரசன், (அவனே) மனிதர்களின் நாயன். பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவனின் தீங்கை விட்டும் (இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்).அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை உண்டாக்குகிறான்.(இத்தகையோர்) ஜின்களிலும், மனிதர்களிலும் இருக்கின்றனர்.

## சிறப்பு

நபி (ஸல்) அவர்கள், ஐந்து நேரத் தொழுகைகளுக்குப் பின்னாலும் முஅவ்விதாத்களை (ஸூரா நாஸ், ஸூரா பலக், ஸூரா இக்லாஸ்) ஓதுமாறு ஏவினார்கள்.

திருக்குர்ஆன் 112, 113,114, அறிவிப்பாளர்: உக்பதுப்னு ஆமிர் (ரழி) அவர்கள், அபூதாவூத்: 1523